

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 07-12-2024

# ஆங்கே இடுக்கண் களையும் அரசு

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு - என்கிறார் வள்ளுவர்.**

**அத்தகைய அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. புயல் பாதிப்புகளுக்கு உடனடியாக உதவிப் பணிகளைச் செய்து இது துரிதமான அரசு என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறார்.**

ஃபெஞ்சல் புயல் கோரத் தாண்டவம் ஆடிவிட்டுச் சென்றுள்ளது. மயிலத்தில் 51 செ.மீ, ஊத்தங்கரையில் 50 செ.மீ, புதுச்சேரியில் 49 செ.மீ, திண்டிவனத்தில் 37 செ.மீ, விழுப்புரத்தில் 27 செ.மீ, கடலூரில் 23 செ.மீ, திருவண்ணாமலையில் 22 செ.மீ, வேலூரில் 11 செ.மீ - மழை கொட்டித் தீர்த்துள்ளது. இத்தகைய இயற்கைப் பேரிடர் மிகப்பெரிய அளவில் ஏற்பட்ட நிலையில் மக்களைக் காக்கும் பணியில் முதலமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் அதிவேகமாகச் செயல்பட்டு மக்களைக் காக்கும் பணியில் இறங்கினார்கள். இரண்டே நாட்களில் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுத்து விட்டார்கள்.

வங்கக் கடலில் நவம்பர் 24-ஆம் தேதி உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, 27-ஆம் தேதி ஆழ்ந்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. அது 29-ம் தேதி வெள்ளிக்கிழமை ஃபெஞ்சல் புயலாக மாறியது. சென்னை வானிலை ஆய்வு மையம் கணித்தபடி புயல் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, சென்னையை நோக்கி சனிக்கிழமை வரத் தொடங்கியது. வெள்ளிக் கிழமை இரவு சென்னைக்குத் தென்கிழக்கே சுமார் 200 கி.மீ. தொலைவில் இருந்த புயல், சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சென்னைக்கு 90 கி.மீ. தொலைவுக்கு நெருங்கியது. ஆனால், மாலை 5 மணிவரை நகராமல் போக்கு காட்டி புயல் மிரட்டிக் கொண்டிருந்தது.

இந்நிலையில், எதிர்பாராத வகையில் மாலை 5 மணிக்கு மேல் புயல், வந்த திசையில் வடக்கு நோக்கிச் செல்லாமல் மீண்டும் தெற்கு நோக்கித் திரும்பியது. மீண்டும் மாமல்லபுரம் கரையை நோக்கி நகர்ந்து, கரைக்கு நெருக்கமானது. இரவு 7 மணியளவில் புயல் மரக்காணம் அருகே கரையைக் கடக்கத் தொடங்கியது. அப்போது மணிக்கு 90 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்று வீசியது. மழையும் மிகப் பலமாகக் கொட்டியது.

புயல், நள்ளிரவு 11.30 மணியிலிருந்து 12.30 மணிக்குள் மரக்காணம் அருகே கரையைக் கடந்த நிலையில், புதுச்சேரி மற்றும் விழுப்புரம் மாவட்ட சுற்றுப்புறப் பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால்தான் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் மழை பெய்தது. இதனால்தான் சுற்று வட்டாரப் பகுதியிலும் நீர்பிடிப்பு இடங்களிலும் பெய்த மழை நீர், சாத்தனூர் அணைக்கு எதிர்பார்க்க முடியாத வகையில் மிக அதிக அளவில் வந்து சேர்ந்தது.

ஃபெஞ்சல் புயலால் நீர்பிடிப்பு பகுதியில் பெரும் மழை பொழிவால் சாத்தனூர் அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்தது. அணையின் முழு கொள்ளளவான 119 அடியை நெருங்கியது. தண்ணீர் வரத்தை முன்கூட்டியே கணித்து, அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வந்த தண்ணீர், தென் பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்பட்டது.

சாத்தனூர் அணை நிரம்பிவந்த நிலையில் கரையோர மக்களுக்கு தொடர் எச்சரிக்கை விடுத்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால் ‘செம்பரம்பாக்கம் அ.தி.மு.க.’ புகழ் பழனிசாமி தனது பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டு இருக்கிறார்.

**உடனடியாக முதலமைச்சர் அவர்கள் அனைத்து இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார்கள். மழைநீரை உடனடியாக வெளியேற்றும் நடவடிக்கைகள் செய்யப்பட்டன. மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்களது முழுத் தேவைகள் செய்து தரப்பட்டன. உணவுப் பொருள்கள், அன்றாட அவசியப் பொருள்கள் அனைத்தும் தரப்பட்டன. சமுதாயக் கூடங்கள் மூலமாக உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. புதிய சமையல் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இருப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், வீடுகளில் இருக்கும் மக்களுக்கும் தருவதற்கு உணவுப் பொருட்கள் தயாரித்து வழங்கப்படுகிறது.**

தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

உயிரிழந்தவர் குடும்பத்துக்கு 5 லட்சம் நிதி உதவியை வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள். சேதமடைந்த குடிசைகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியது மட்டுமல்ல; முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளை கலைஞர் கனவு இல்லத் திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து வீடுகள் கட்டவும் உத்தரவிட்டுள்ளார். பாசனப் பயிர்கள் பாதிப்புக்கு ஹெக்டேருக்கு 17 ஆயிரம் ரூபாயும், மரங்களாக இருந்தால் ஹெக்டேருக்கு 22,500 ரூபாயும் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். எருது, பசு உயிரிழப்புக்கு 37,500 ரூபாய் அறிவித்துள்ளார்கள்.

இவை அனைத்துக்கும் மேலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு 2 ஆயிரம் வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்ட மக்கள் இதனைப் பெறுவார்கள்.

SDRF நிதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு வழங்காத நிலையில் இவை அறிவிக்கப்பட்டுள்ளன என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆகும்.

**நடப்பு 2024-25 நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதிக்கு சுமார் ரூ.1,260 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசு வழங்கவில்லை ஆந்திரா, அசாம், பீகார், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஒதுக்கிய முழு நிதியையும் ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. பெரும்பாலான மாநிலங்களுக்கு முதல் தவணை நிதியையும் ஒன்றிய அரசு வழங்கியுள்ள நிலையில், தமிழ்நாட்டுக்கு இதுவரை எந்த நிதியும் வழங்கவில்லை.**

பா.ஜ.க. அரசை நம்பிக் காத்திருந்தால் மக்களைக் காப்பாற்ற முடியாது என்பது அனைவரும் அறிந்ததுதான்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள வருகை தந்துள்ள பல்துறை ஒன்றியக் குழு – ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா, ஒன்றிய விவசாய மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர் முனைவர் கே. பொன்னுசாமி, ஒன்றிய நிதித்துறை இயக்குநர் சோனாமணி அவுபம். ஒன்றிய ஜல்சக்தி துறை இயக்குநர் ஆர். சரவணன், ஒன்றிய சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை முன்னாள் பொறியாளர் தனபாலன் குமரன், ஒன்றிய எரிசக்தித் துறை உதவி இயக்குநர் ராகுல் பாடீச்கேட்டி, ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் பாலாஜி ஆகியோர் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பல்துறை ஒன்றியக் குழுவிடம் - முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தல்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

பாதிப்புகளின் அளவு மற்றும் மறுசீரமைப்பின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, இடைக் கால நிவாரணமாக 2000 கோடி ரூபாயினை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி கேட்டுக் கொண்டதோடு, உடனடியாக ஒன்றிய பல்துறை குழுவினை அனுப்பி சேத விவரங்களை கணக்கிடவும் கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தார்.

அதைத் தொடர்ந்து 3.12.2024 அன்று காலை இந்திய பிரதமர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தற்போது ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து, இந்த இயற்கை பேரிடரின் விளைவுகளை சமாளிக்க மாநிலத்திற்கு இடைக் கால நிவாரணமாக 2000 கோடி ரூபாயை உடனடியாக விடுவித்திட வேண்டும் என்றும், ஒன்றிய குழுவினை சேத மதிப்பீடுகள் மேற்கொள்ள விரைந்து அனுப்பி வைத்திடுமாறும் மீண்டும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் துரித மீட்பு நடவடிக்கைகளினால் ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் இயல்பு வாழ்க்கை விரைந்து மீண்டு வருகின்றது.

முதலமைச்சர் அவர்கள் 3.12.2024 அன்று அதிகனமழையின் காரணமாக கடுமையான மழைப் பொழிவினை சந்தித்த விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூபாய் 2 ஆயிரம் வழங்கிடவும்; ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கிடவும்; சேதமடைந்த குடிசைகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் வழங்கிடவும்; முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை அளித்திடவும், மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 17 ஆயிரம் வழங்கிடவும்; பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 22,500/- வழங்கிடவும்; மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500/- வழங்கிடவும், கால்நடை இழப்பிற்கும் நிவாரணம் அறிவித்து உத்தரவிட்டார். அதன்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒன்றிய பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா அவர்களது தலைமையிலான பல்துறை ஒன்றிய குழுவினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய குழுவிடம் ஃபெஞ்சல் புயலின் தற்காலிக மற்றும் நிரந்தர மறு சீரமைப்புப் பணிகளுக்கு 6675 கோடி ரூபாய் வழங்கிட வேண்டி முழு விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார். மேலும், ஒன்றிய குழுவிடம் தமிழ்நாட்டிற்கு தேவையான நிவாரணப் பணிகள், நிரந்தர மற்றும் தற்காலிக மறு சீரமைப்புப் பணிகளுக்காக நிதியினை பெற்றுத் தர விரைந்து பரிந்துரைத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோர் ஒன்றிய குழுவிடம் ஃபெஞ்சல் புயல் சேத விவரங்கள் குறித்து விளக்கப் படக் காட்சி மூலம் விளக்கினார்கள். முக்கிய அரசுத் துறை செயலாளர்கள் உடன் கலந்து ஆலோசித்து ஒன்றியக் குழுவினர் மாவட்டங்களுக்கு கள ஆய்வு செல்வது பற்றி முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ஒன்றிய குழுவினர் 7.12.2024 மற்றும் 8.12.2024 ஆகிய தேதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புயல் மற்றும் வெள்ள சேதத்தினை பார்வையிட உள்ளனர். கள ஆய்வினை ஒருங்கிணைக்க மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்கனவே தங்கி முன்னேற்றப்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வேளாண்மை – உழவர் நலத் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கடந்த மூன்றரை ஆண்டுகளில் 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில்

# 18,81,079 புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்து திராவிட மாடல் அரசு சாதனை!

## அமைச்சர் சி.வி. கணேசன் பெருமிதம்!

*சென்னை, டிச.7-*

*தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைக்கும் போதெல்லாம் தொழிலாளர்களின் உரிமைகளையும் வாழ்நிலையையும் உயர்த்துவதில் தனிக் கவனம் செலுத்திச் செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பொறுப்பேற்ற பிறகுதான் முதன்முதலாக தனியே தொழிலாளர் நலத் துறையையும், தொழிலாளர் நல அமைச்சகமும் ஏற்படுத்தப்பட்டன.*



*தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்த உதவியாக 1971ஆம் ஆண்டு தொழிலாளர் நலவாரியத்தை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தினார் கலைஞர். அவ்வழியில் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பிறகு இந்தத் திராவிட மாடல் அரசு தொழிலாளர்கள் நலனில் அக்கறைக் கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

*குறிப்பாக, அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகக் கடந்த மூன்றரை ஆண்டுகளில், 20 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் 18,81,079 புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களில் பதிவுப் பெற்றுள்ள 25,35,546 உறுப்பினர்களுக்கு 2,106 கோடி ரூபாய் வரையிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.*

*மேலும் அமைப்புசாரா தொழிலாளர்கள் வாரிய உறுப்பினர்களின் ஓய்வூதியம் 1000 ரூபாயிலிருந்து 1200 ரூபாயாக உயர்த்தி வழங்கினார் முதலமைச்சர். தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்காகச் சிரத்தையுடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் திராவிடமாடல் அரசு அவர்களின் உரிமைகளைக் காப்பதிலும், அவர்களுக்கான நலத்திட்டங்களை வகுப்பதிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு தோழனாய் பாதுகாவலனாய் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.*





சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 102வது வட்டக் கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டக்கழச் செயலாளர் பி.சந்திரசேகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ச.பரமசிவம், கடலூர் இள.புகழேந்தி, அருண், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு / பொதுக்குழு நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.